# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 214/2021 நாள்.20.11.25

PW2- திரு பக்கிரிசாமி த/பெ. திரு. சோமசுந்தரம்

பிரதிவாதிதரப்பில் குறுக்குவிசாரணை

வாதி என் மருமகன் என்றால் ஆமாம். வழக்கு சொத்து அருகில் வசிக்கிறேன் என்றால் ஆமாம். வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே நடக்கும் வழக்கு ஆரம்பத்திலிருந்து எனக்கு தெரியும் என்றால் ஆமாம். கிரைய ஒப்பந்தம் சம்மந்தமாக நான் பேசினேனா என்றால் நான் எனது மருமகனை வைத்து பேசினார்கள். கிரைய ஒப்பந்தம் பேசும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் கமலவாசன், சரவணன் மற்றும் நான் இருந்தேன். எவ்வளவு ரூபாய்க்கு கிரயம் பேசபட்டது என்றால் குழி ரூ17000/- பேசபட்டது. எவ்வளவு குழிக்கு என்றால் 69குழிக்கு பேசினோம். மொத்த கிரையத்தொகை எனக்கு எவ்வளவு என்று தெரியாது என்றால் ஆமாம். என்ன தேதியில் கிரைய ஒப்பந்தம் போடபட்டது என்றால் 30.3.2021. கிரைய ஒப்பந்தம் போட்டபோது எவ்வளவு முன்தொகை கொடுத்தோம் என்றால் ரூ.5,00,000/- ஆகும். மூன்று மாதத்தில் கிரைய பத்திரம் பதிவு செய்துகொள்வதாக ஒப்பந்தம் பேசினோம் என்றால் ஆமாம். கிரைய ஒப்பந்தத்தில் யார்யார் சாட்சி கையெழுத்துபோட்டுள்ளார்கள் என்றால் கமலவாசன் மற்றும் விக்னேஸ்வரன். விக்னேஸ்வரன் அப்பா பெயர் என்ன என்றால் ஞானசேகரன். தேதி குறிப்பிட்டு கிரைய பத்திரம் பதிவு செய்து கொள்வதாக எழுதபட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. 26.5.2021 அன்றும், 12.7.2021 அன்றும் வாதி, பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததாக என் பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் ஆனால் எவ்வளவு தொகை என்று நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் ஆமாம். 26.5.2021 அன்று எவ்வளவு தொகை கொடுத்தேன் என்றால் ரூ.1,30,000/-ஆகும். அதற்கு சாட்சி கையொப்பமோ, மேற்குறிப்போ எழுதபட்டதா என்றால் எழுதப்படவில்லை. 12.7.2021 அன்று எவ்வளவு தொகை கொடுத்தேன் என்றால் ரூ.5,00,000/-ஆகும். எந்த தேதியில் பணம் கொடுத்தாக குறிப்பிட்டு எழுதியுள்ளோமா என்றால் எழுதியுள்ளோம். 12.7.2021 அன்று மேற்குறிப்பு எதுவும் எழுதபட்டதா என்றால் எழுதப்படவில்லை. பிரதிவாதியிடம் கையொப்பம் மட்டும்

வாங்கிகொண்டோம். சந்திரசேகர், கமலவாசன், சுப்ரமணி மற்றும் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளோம். 12.7.2021 அன்று மேற்கண்ட நான்கு பேரும் பத்திரத்தில் சாட்சி கையொப்பம் போட்டுள்ளோம். ரூ.5,00,000 பணம் கொடுத்ததற்கு கிரைய ஒப்பந்தத்தில் மேற்குறிப்பு எதுவும் எழுதப்படவில்லை. அளந்துகொடுப்பதாக சொல்லி மேற்குறிப்பு எதுவும் எழுதபட்டுள்ளதா என்றால் இல்லை. சாட்சி கையொப்பம் போட்டு அதற்கு கீழே தேதி குறிப்பிட்டு எழுதியுள்ளோமா என்றால் எழுதவில்லை. என் மருமகன் எதுவும் கையெழுத்து போட்டுள்ளாரா என்றால் நினைவில்லை. 12.7.2021 அன்று ரூ.5,00,000 கொடுத்ததாக சொல்வது பணமாகவா என்றால் ஆமாம். பணம் வங்கியிலிருந்து எடுத்து வந்தோமா என்றால் வாதி வங்கியில் நகைகளை அடமானம் வைத்து கொண்டுவந்தார். எப்போது வங்கியில் அடமானம் வைத்தார் என்றால் எனக்கு தெரியாது. 12.7.2021 அன்று ரூ.5,00,000 பிரதிவாதி வாதியிடமிருந்து வாங்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியிடமிருந்து ரூ5,00,000த்திற்காக கையொப்பம் வாங்கியதாக சொல்வது பொய் என்றாலும் பிரதிவாதி அவ்வாறு எந்த கையொப்பமும் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி 12.7.2021 அன்று ரூ.5,00,000 பிரதிவாதியிடம் கொடுக்கவில்லை வழக்கிற்காக பொய் சொல்கிறோம் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் கையொப்பத்தை போர்ஜரியாக நானும் வாதியும் போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.